பக்கங்கள்: ஆறு

நல்லூர் பிரதேச நூலகம்
மாநகர Registered as a Newspaper
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 15 திங்கட்கிழமை (29-06-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 214

# கட்டைக்காட்டில் படையினர் இருமுனைகளில் நகர முயற்சி

## முப்படைகளும் தாக்குதல்; கடும் சண்டை மூண்டது!

யாழ்ப்பாணம், ஜூன் 29

வெற்றிலைக்கேணி, கட்டைக்காட்டுப் பகுதியில் நிலை கொண்டிருந்த படையினர் நேற்றுக் காலை அங்கிருந்து இரு முனைகளில் நகர முயன்றதை அடுத்து அங்கு கடும் சண்டை மூண்டது.

முப்படைகளும் பெரும் எடுப்பில் தாக்குதல் நடத்த, அவற்றின் உதவியுடன் இராணுவத்தினர் நகர முயற்சிப்பதாகவும் விடுதலைப் புலிகள் அதனை தடுக்கும் நோக்குடன் கடுமையாக மோதி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற சண்டைகளில் படையினரின் தரப்பில் பேரிழப்பு ஏற்பட்டதாகவும் — விடுதலைப் புலிகள் தரப்பில் எட்டுப் போராளிகள் வரை வீரமரணமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

யுத்தம் நடைபெறும் பகுதிகளில் கடும் விமானத் தாக்குதல்களும், ஷெல் மற்றும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## எண்மர் வீரமரணம்

கட்டைக்காட்டில் நேற்று இடம்பெற்ற மோதல்களில் விடுதலைப் புலிகள் போராளிகளான வெற்றி [கனகலிங்கம் அருள்நேசன் — பளை], இளங்கதிர் அல்லது சூரியகுமார் [சின்னையா பத்மநாதன்—மட்டக்களப்பு], எல்லாளன் அல்லது அன்ஸார் [கனிஸ்டஸ் புலேந்திரன் — உரும்பராய்], வீரமணி அல்லது தீபன்ராஜ் [குணரத்தினம் சிறீரஞ்சன்-மட்டுவில்] கபில் [பாலசிங்கம் முரளிதரன்-அளவெட்டி] ஆகியோரும் —

எல்லாளன் [பொன்னுச்சாமி கரிகாலன் — வல்வெட்டித்துறை], வீரமணி [கணேசபிள்ளை சந்திரகுமார் — திருமலை], கலைஞன் [செல்வநாயகம் ரஞ்சன் — மட்டக்களப்பு] ஆகியோரும் வீரமரணமடைந்தனர்.

## தொடர்ந்து ஊரடங்கு

கொழும்பு, ஜூன் 29

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவுமாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து அமுல்படுத்தப்பட்டு வருவதாகவும் மறு அறிவித்தல் வரை அது தொடரும் என்றும் நேற்று அறிவிக்கப்பட்டது. [ஒ-10]

## குண்டு வீச்சால் இயக்கச்சியில் ஒருவர் பலி!

இயக்கச்சிப் பகுதியில் நேற்று நண்பகலளவில் விமானக் குண்டுவீச்சுக்கு இலக்காகி அச்செழுவாகி ஒருவர் பலியானார்.

யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்ட இவரின் சடலத்தை உறவினர்கள் அடையாளம் காட்டினர்.

நன்னியன் சின்னராசா (38 வயது) என்னும் இரு பிள்ளைகளின் தந்தையே பலியானவர் ஆவார்.

இவர் சைக்கிளில் விறகு கட்டி வந்து விற்பனை செய்யும் வியாபாரி எனத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-3]

## வீரமரணம்

தாளையடிக் கடற்பரப்பில் கடந்த பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி நடந்த மோதலில் விழுப்புண் ஏற்பட்டு சிகிச்சை பெற்று வந்த விடுதலைப் புலிகளின் கடற்புலிப் பிரிவைச் சேர்ந்த கப்டன் ஆதித்தன் [குகநாதன் கேதீஸ்வரன் - தொண்டமனாறு] நேற்று முன்தினம் வீரமரணமடைந்தார். [ஒ-3]

## பளை 'கெயர்' களஞ்சியம் குண்டு வீச்சால் பெரும் சேதம்!

பளை ஜூன் 29

பளைப் பகுதியில நேற்று முற்பகல் 11 மணியளவில் இரு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

குண்டு வீச்சினால் அங்கு உள்ள யு. எஸ். எயிட்—கெயார் விவசாயத் திட்ட அலுவலகமும் களஞ்சியமும் முற்றாகச் சேதமாகின. அப்பகுதியில் சில வீடுகளும் சேதமடைந்தன.

கெயார் விவசாயத் திட்ட அலுவலகம், களஞ்சியம் ஆகியவற்றில் இருந்த பல்லாயிரம் ரூபா பெறுமதியான உடைமைகள் நாசமாகின.

இந்தக் குண்டு வீச்சுச் சம்பவத்துக்கு சற்று முன்னர் பளைப் பகுதியை அவ்ரோ விமானமும், ஹெலியும் பல தடவைகள் வட்டமிட்டு நோட்டமிட்டன.

தரைமட்டமாக்கப்பட்ட களஞ்சியம் சர்வதேச தொண்டர் அமைப்பான ''கெயர்'' நிறுவனத்துக்குரியது. யு.எஸ். எயிட் என்ற அமெரிக்க அமைப்புடன் இணைந்து ''கெயர்'' நிறுவனம் கிளிநொச்சியில் ஐயாயிரம் விவசாயிகளுக்கான தெரிவு செய்யப்பட்ட விவசாயத் திட்டம் ஒன்றைச் செயற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. [உ-ஒ 5]

## இப்போது இடம்பெறுவது இறுதித் தாக்குதல் அல்லவாம்

கொழும்பு, ஜூன் 29

வடக்கில் ஆரம்பமாகியுள்ள இராணுவ நடவடிக்கை இறுதித் தாக்குதல் அல்ல. முன்னர் நடந்த தாக்குதல்களிலும் பார்க்க இது சிறிது கடுமையான தாக்குதல் மட்டுமே.

— இவ்வாறு இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்ன தெரிவித்தார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கில் பல முனைகளிலும் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-த]

## ''ஒப்பரேசன் பலவேகய-2'' நேற்று ஆரம்பமானது!

யாழ்ப்பாணம், ஜூன் 29

வெற்றிலைக்கேணிப் பகுதியில் நேற்று ஆரம்பமான இராணுவ நடவடிக்கைக்கு ''ஒப்பரேஷன் பலவேகய—2'' என்று பெயரிடப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவத்தினருக்கு உதவியாக விமானப் படையினரும், கடற்படையினரும் செயற்பட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் வெற்றிலைக்கேணியில் துருப்புகள் தரையிறக்கப்பட்டவேளை இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைக்கும் ''பலவேகய'' என பெயரிடப்பட்டிருந்தது தெரிந்ததே. [ஒ-எ]

## வவுனியா பகுதியில் துணிகரத் தாக்குதல்! 15 காவலரண்கள் அழிப்பு; 4 படையினர் பலி!!

வவுனியா, சூடுவெந்தபுலவுப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் தொடர் காவல் அரண்கள் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் இரவு 11. 30 மணியளவில் திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

விடுதலைப் புலிகள் வீரர்கள் நடத்திய இந்தத் துணிகரத் தாக்குதலின் போது 15 இராணுவ காவலரண்கள் தகர்த்து அழிக்கப்பட்டன. நான்கு படையினரும் தாக்குதலில் உயிரிழந்தனர், மற்றும் சிலர் காயமடைந்தனர்.

சுமார் 30 நிமிடங்கள் வரை நீடித்த மோதலின் பின்னர் நான்கு நவீன ரக ஆயுதங்கள் உட்பட பெருமளவு இராணுவத் தளபாடங்களையும் கைப்பற்றினர். விடுதலைப் புலிகள் தரப்பில் 4 வேங்கைகள் களப் [illegible]

இதேசமயம் வவுனியாப் பகுதியில் புலிகள் நடத்திய தாக்குதலில் 3 படையினர் உயிரிழந்தனர் என்றும், மேலும் இருவர் படுகாயமடைந்தனர் என்றும் கொழும்பில் படை வட்டாரங்கள் தெரிவித்தன. [ஒ-எ-3-10]

### 4 வேங்கைகள் களப்பலி

சூடுவெந்தபுலவில் நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகள் நடத்திய வெற்றிகரத் தாக்குதலின்போது 4 வீரவேங்கைகளும் களப்பலியானார்கள்.

2 ஆம் லெப்டினன்ட் புகழேந்தி [நாகராசா மோகனராசா - பாவற்குளம்], லெப்டினன்ட் ரகு [பெரியதம்பி குகதாஸ் - கனகராயன்குளம்], லெப். சிலம்பரசன் அல்லது ரம்போ பரமானந்தன் தயானந்தன் - கிளிநொச்சி], லெப். மகேந்திரன் [பூலோகசிங்கம் பத்மலோஜன்-வவுனியா] ஆகியோரே களப்பலியானவர்கள் ஆவர்.

### கைப்பற்றிய ஆயுதங்கள்

வவுனியா, சூடுவெந்தபுலவில் நடத்தப்பட்ட தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

- ★ ஜி 3 ஏ 3 ரகத் துப்பாக்கி — 1
- ★ ரி 56 புதிய ரகத் துப்பாக்கி — 3
- ★ ரி 56 - 2 ரகத் துப்பாக்கி — 1
- ★ 303 ஏ. கே. எல்.எம். ஜி சுடுகுழல் — 1
- ★ 303 மகஸின் — 1
- ★ ஏ. கே. மகஸின் — 8
- ★ ஜி 3 மகஸின் — 4

(2 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கு மீண்டும் பரீட்சை

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற — பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர் பதவிக்கான — போட்டிப் பரீட்சையில் தோற்றத் தவறியவர்களுக்கு எதிர்வரும் 12 ஆம் திகதி விசேட பரீட்சை ஒன்று நடாத்தப்படவிருக்கிறது.

வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இப்பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் இன்று தபாலில் சேர்க்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. (உ-3)


உ

சிற்றம்பலம்

சரவணைக் கட்டுவன் வரன்

### அருள்மிகு ஐயனார் திருக்கோவில் வருடாந்த மகோற்சவ தின சங்காபிடேகம்

அன்புடையீர்,

சரவணையில் நடந்த இராணுவ நடவடிக்கைகளால் நித்திய நைமித்திய பூசைகளை இழந்துள்ள கட்டுவன் வான் ஐயனார் திருக்கோவில் மகோற்சவ கால நினைவாக,

வண்ணார்பண்ணை ஐயனார் திருக்கோவிலில் 29 - 06 - 92 திங்கள் [இன்று] காலை 9-00 மணிமுதல்

★ விசேட சங்காபிடேகம் ★

சரவணைக் கட்டுவன் வான் அருள்மிகு ஐயனார் திருக்கோவிற் திருவிழா உபயகாரர்களாலும், அறங்காவற் சபையினராலும் நடாத்தப்பெற உள்ளது.

அன்பர்கள், அடியார்கள் அனைவரும் கலந்து வழிபட்டுச் செல்ல வேண்டுகிறோம்.

— அறங்காவற் சபை

சரவணை - வேலணை.
28 6-92 [21567]



### பொருட்காட்சி நீடிக்கப்பட்டுள்ளது

கலாலயாவின்

மனைப்பொருளியலும், கைத்திறனும்

பொருட்காட்சி 30 - 06 - 1992

[செவ்வாய்க்கிழமை]

மாலை 6-00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இடம் கலாலயா,
விக்டோரியா வீதி, யாழ். நகர்.
(ஆஸ்பத்திரியின் பின்புறம்)

[சி-2171] — இயக்குனர்.



### நெல்லண்டையான் வெளியீட்டு கழக 5ஆவது நூல் (வேதங்கள்) வெளியீட்டு விழா

இடம் : தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்
காலம் : 29-06-1992 திங்கள் 2-00 மணியளவில்
தலைவர் : திரு. சி. சிவஞானசுந்தரம்
[இளைப்பாறிய அதிபர், து. சி. ம. வித்தி.]

வெளியீட்டுரை :
பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ்

விமர்சன உரை :
திரு. நா. குழந்தைவேலு
[யாழ். உயர்கலைக் கல்லூரி]

மதிப்புரை :
திருமதி அருள்நங்கை சண்முகநாதன்
[யாழ். புதிய உயர்கலைக் கல்லூரி அதிபர்]

அணிந்துரை :
திரு. எஸ். சிவலிங்கராஜா
[யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்]

சிறப்புரை :
பண்டிதர், வித்துவான் க. கிருஷ்ணபிள்ளை
ஏனைய மாண்புடை அறிஞர்களும் சிறப்புரை வழங்க இருக்கிறார்கள்.

பதிலுரை : நூலாசிரியர் –
சிவஸ்ரீ தி. சோமாஸ்கந்தராஜக் குருக்கள்
B. A. [இலங்கை], நெ. அம்மன் பிரதம குரு

நன்றியுரை :
க. சோமசுந்தரம் [அதிபர், தையிட்டி ம. வி.]

மலர் வெளியிடும் மாண்புறு வேளையில், உற்றார், ஊரார், உயர் நல்லறிஞர், உளத்தால் இணைந்த உரிமை நண்பர், நற்றிறம் மிக்கார், ஆர்வலர் யாவரும் அன்புடன் வந்து அருகினில் நின்று இம்மலரினை வாழ்த்திட நும்மை இதயமார அழைக்கின்றோம். வருக.

— நெல்லண்டையான் வெளியீட்டு

29-6-92 [2…]


# இவ்வருட இறுதிக்குள் தீர்வு கிடைத்து விடுமாம்!

## புத்தளவில் நேற்று பிரேமா அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 29

வடக்கு - கிழக்குப் பிரச்சினை கடந்த இருபது வருடங்களாக நாட்டு மக்களை வாட்டி வருகிறது. இப்பிரச்சினைக்கு இவ்வருட இறுதிக்குள் யாவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு காணப்பட்டு விடும் என்று நான் நம்புகின்றேன்.

ஜனாதிபதி பிரேமதாஸா நேற்று புத்தளவில் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் கலந்து கொண்ட மாநாடு ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக பல்வேறு கருத்து வேறுபாடுகள் தோன்றக்கூடும் பல்வேறு குழுக்கள் மற்றும் கட்சிகளிடமிருந்தும் மேலும் ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. சகல ஆலோசனைகளையும் நன்கு ஆராய்ந்த பின்னரே நடைமுறைப் படுத்துவதற்கான —பொதுவான அம்சங்கள் அடங்கிய— தீர்மானங்கள் எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் சிபார்சுகளை அரசாங்கம் எதிர்பார்த்து இருப்பதாக தெரிவித்த ஜனாதிபதி, பல்வேறு தரப்பு மக்களினதும் குறைபாடுகளையும் அபிலாஷைகளையும் நன்கு பரிசீலனை செய்த பின்னரே தெரிவுக் குழு தனது யோசனைகளைச் சமர்ப்பிக்கும் என்று தாம் நம்புவதாகவும் சொன்னார். நாடு முன்னேற்றப் பாதையில் விரைந்து செல்ல வேண்டுமானால் நாம் அனைவரும் ஒன்றிணைந்து வடக்கு கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு கண்டாக வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (ஒ-எ)

### பொலீஸ் கார் மீது குண்டு வீச்சு

லண்டன் ஜூன் 29

அயர்லாந்தில் சந்தடி மிக்க கடைத் தெரு ஒன்றில் நேற்று முன்தினம் பொலீஸ்கார் ஒன்றின் மேற்கூரையில் குண்டு ஒன்று வெடித்ததில் காரிலிருந்த இரு பொலீஸாரும், 21 பொதுமக்களும் காயமடைந்தனர்.

பொலீஸார் காருக்குள் இருந்து கண்காணிப்பு செய்து கொண்டிருந்த போது ஒருவர் கார் மீது குண்டை வீசியதாகவும் அது உடனடியாக வெடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. [த-10]

### இஸ்ரவேலில் பயிற்சிபெற்ற இந்தியப்படை!

இஸ்ரவேலில் உளவுப் பயிற்சித் துறையில் பயிற்சி பெற்ற இந்திய பாதுகாப்புப் படைப் பிரிவு ஒன்று புதுடில்லி திரும்பியுள்ளது.

'பயணியர்' என்ற பத்திரிகை வெளியிட்ட தகவலின்படி, இப்படைப் பிரிவு சீக்கியர்களுக்கு எதிரான திடீர் தாக்குதல் ஒன்றை எதிர்வரும் மாரிகாலத்தில் ஆரம்பிப்பார்கள் என்றும்—

உத்தரப் பிரதேசத்தில் இப்பிரிவு நிலைகொண்டு நடவடிக்கையில் ஈடுபடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

### சூடுவெந்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

- ★ 303 ரகத் துப்பாக்கி ரவைகள் — 1,700
- ★ நேட்டோ ரவைகள் — 177
- ★ நடுத்தர ரவைகள் — 562
- ★ ரி. என். ரி. கிரனேட் — 4
- ★ ஜே. ஆர். கிரனேட் — 3
- ★ ஏ. கே. ஹோல்ஸர்கள் — 6
- ★ இராணுவப்பட்டி — 3
- ★ [illegible] — 3
- ★ மழைக் கவசம் — 2


### யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்,

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. உடலமைப்பியல் - பேராசிரியர்.
2. நோயியல் - பேராசிரியர்.
3. மனநோயியல் - பேராசிரியர்
4. குழந்தை மருத்துவப்- பேராசிரியர்.
5. அக்கக்கோணல் அறுவை/மருத்துவ அறக்கொடைத்தவிசு.
6. கழலையியல் அறக்கொடைத்தவிசு
7. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11 - உடலமைப்பியல் / உடற்றொழிலியல் / சமுதாய மருத்துவம் / சட்ட மருத்துவம் / நுண்ணுயிரியல் / ஒட்டுண்ணியியல் / நோயியல் / மருந்தியல் / மருத்துவம் / மகப்பேற்று மருத்துவமும் மாதர் நோயியலும் / குழந்தை மருத்துவம் / அறுவை மருத்துவம்.
8. விரிவுரையாளர் / தற்காலிக விரிவுரையாளர் - உயிர் இரசாயனவியல் / உடலமைப்பியல் / உடற்றொழிலியல் / சமுதாய மருத்துவம் / சட்டமருத்துவம் / நுண்ணுயிரியல் / ஒட்டுண்ணியியல் / நோயியல் / மருந்தியல் / மருத்துவம் / மகப் பேற்று மருத்துவமும் மாதர் நோயியலும் / குழந்தை மருத்துவம் / அறுவை மருத்துவம்.
9. உயிர் இரசாயனவியலில் உதவி விரிவுரையாளர் / தற்காலிக உதவி விரிவுரையாளர்.

சம்பள அளவுத் திட்டம்:-

பேராசிரியர் தரம் 11
ரூபா 12,200 — 6x300 — 14,300/- மாதமொன்றுக்கு

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11:
ரூபா 8,000 — 5x 250 — 9,250/- மாதமொன்றுக்கு.

விரிவுரையாளர் [மருத்துவம்]:
ரூபா 4,500 — 10x200- 6,500/- [மாதமொன்றுக்கு
[மருத்துவ பீடத்தின் விரிவுரையாளருக்கு முதல் நியமனத்தின் போது மேற்குறித்த சம்பள அளவுத் திட்டத்தில் இரண்டு படி அதிகமாக வழங்கப்படல் வேண்டும். அதாவது 4,900/- சம்பளத்தில் வைக்கப்படல் வேண்டும்]

தற்காலிக விரிவுரையாளர் [மருத்துவம்]:
ரூபா 4,900/- மாத மொன்றுக்கு.

உதவி விரிவுரையாளர்:
ரூபா 3,900/- மாதமொன்றுக்கு [நிலையானது] ஓராண்டிற்கு.
ஓராண்டு திருப்திகரமான சேவையை நிறைவு செய்த பின்னர் துணைவேந்தர்
ரூபா 4,500 - 10x200 - 6,500/- [மாதமொன்றுக்கு] சம்பள அளவுத் திட்டத்தில் 4,500/- சம்பளப் படியில் வைப்பார்.

தற்காலிக உதவி விரிவுரையாளர்:
ரூபா 3,900/- மாத மொன்றுக்கு [நிலையானது]

பேராசிரியர்களுக்கும், அறக்கொடைத்தவிசுகளுக்கும் விண்ணப்ப முடிவு திகதி 1992-09-30 ஏனையோருக்கு முடிவு திகதி 1992-08-17 ஆகும்.

1. மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும் இதர விபரங்களையும் இப் பல்கலைக்கழகத் தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.
2. விண்ணப்பப் படிவங்களைத் தபாலில் பெற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் 23x10 ச. மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை இணைத்தனுப்பப்படல் வேண்டும்.
3. அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் என்பனவற்றிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.
4. ஒரு பதவிக்கு மேல் விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
5. தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

குறிப்பு: ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்.

- பதிவாளர்.

யாழ்ப்பாணப் -
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-06-25.

[சி-2169]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்கட்டிச்சோலை படுகொலைச் சம்பவம்:

# ராணுவ நீதிமன்ற விசாரணை மட்டக்களப்பில் ஆரம்பம்

## 19 இராணுவத்தினர் மன்றில் ஆஜர்

மட்டக்களப்பு, ஜூன் 29

கொக்கட்டிச்சோலை படுகொலைச் சம்பவம் தொடர்பாக 19 இராணுவத்தினருக்கு எதிரான இராணுவ நீதிமன்ற விசாரணை கடந்த வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் மட்டக்களப்பில் நடைபெற்றது.

இவ் விசாரணைகளில் சாட்சியமளிப்பதற்கு மட்டக்களப்பைச் சேர்ந்த 10 பொது மக்கள் அழைக்கப்பட்டிருந்தனர். அதேசமயம் குற்றம் சாட்டப்பட்ட 19 இராணுவத்தினரும் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

கொக்கட்டிச் சோலை படுகொலைகளை விசாரிக்க நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு தனது விசாரணைகளை முடித்துக் கொண்டதை அடுத்து இராணுவ நீதிமன்றம் மட்டக்களப்பு இராணுவத் தலைமைப் பீடத்தில் கூடியது.

விசாரணைகளில் கலந்து கொள்ள இராணுவ உயர் அதிகாரிகள் கொழும்பில் இருந்து மட்டக்களப்பு வந்திருந்தனர். (ஒ-த)

## சு. க. மத்திய குழுத் தேர்தலில் கொந்தளிப்பு ஏற்படும்?

கொழும்பு, ஜூன் 29

ஆகஸ்ட் மாதம் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள சுதந்திரக் கட்சியின் மத்திய குழுத் தேர்தலில் பெரும் கொந்தளிப்பு ஏற்படலாம் என்று அக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறிமாவின் ஆதரவாளர்களுக்கும், அனுரா பண்டாரநாயக்காவின் ஆதரவாளர்களுக்கும் இடையில் பெரும் பலப் பரீட்சை இடம் பெறலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

கட்சியின் தலைமைப் பதவிக்கு திருமதி பண்டாரநாயக்கா போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டாலும் ஏனைய பதவிகளுக்குக் கடும் போட்டி நிலவும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் செயலாளர் பதவிக்கு மகிந்த ராஜபக்ஷவை அனுரா ஆதரிக்கும் அதே வேளை சிறிமா தர்மசிறீ சேனநாயக்காவை ஆதரிப்பதாகவும் தெரிய வருகிறது. [ஒ த]

## கர்ப்பிணி உட்பட மூவர் விடுதலை

கொழும்பு, ஜூன் 29

பள்ளேகட்டுவ இந்து கலைத் தோட்டத்தில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஏழு பேரில் கர்ப்பிணிப் பெண் உட்பட மூவர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு பெண் உட்பட நால்வர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 23ஆம் திகதி இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். (ஒ-3)

## வியாழன் மடுத் திருவிழா

மன்னார், ஜூன் 29

மடுத் திருப்பதியில் எதிர் வரும் 2ஆம் திகதி திருவிழா நடைபெறவிருக்கிறது.

மன்னார் ஆயர் அதி. வண தோமஸ் சௌந்தரநாயகம் தலைமையில் திருநாள் கூட்டுப்பலி நடைபெறும். மருதமடு அன்னையின் திருச்சுரூப பவனியும் அன்று நடைபெறும். [ஒ-3]

## 4 ஆயிரம் கோடி ரூபா தேவையாம்

கொழும்பு, ஜூன் 29

திருகோணமலை மாவட்டத்தில் நிலக்கரியில் உற்பத்தி செய்யப்படும் மின்சார நிலையம் அமைப்பதற்கு 4 ஆயிரம் கோடி ரூபா செலவு ஏற்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலக்கரி மின்சார நிலையத்தை திருமலை மாவட்டத்தில் அமைக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது தெரிந்ததே. [த எ]

## பூஸா மோதல்: விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு, ஜூன் 29

பூஸா முகாமில் இடம் பெற்ற கோஷ்டி மோதல் குறித்து பூரண விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு இராணுவத் தளபதி சிசில் வைத்திய ரத்ன உத்தரவிட்டுள்ளார்.

இந்த உத்தரவை அடுத்து இராணுவ உயர் அதிகாரிகள் குழுவினர் ஒன்று பூஸாவில் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

முகாமிற்குள் எவ்வாறு ஆயுதங்கள் கொண்டு வரப்பட்டன என்பது குறித்தும் அந்த குழுவினர் விசாரணை நடத்துவர். (ஒ-3)

## பணமாக வழங்கப்படுகிறது

புலோலி கூட்டுறவு கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான ஜூன் மாத ஓய்வூதியம் பணமாக வழங்கப்பட்டு வருகிறது.

பருத்தித்துறை கிராமிய வங்கியிலும் அடுத்த வாரம் முதல் இந்த நடைமுறை கடைப்பிடிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-165)

## மாகாணசபை கூட்டம் அமளி துமளியில் முடிந்தது

கொழும்பு, ஜூன் 29

மேல்மாகாண சபைக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை நடந்த சமயம் சபையில் அமளி துமளி ஏற்பட்டது.

கூட்டத்துக்குத் தலைமை வகித்த சம்ளி குணவர்த்தனாவுக்கு எதிராக கடும் வார்த்தைகள் பிரயோகிக்கப்பட்டன.

கூட்டத்தில் கலாட்டா செய்த உறுப்பினர் விமல் சிறி டி. மெல் பொலீஸாரினால் அலாக்காக தூக்கிச் செல்லப்பட்டார். மற்றொரு உறுப்பினரான வஹறா பெல்பிட்டவையும் பொலீஸார் அழைத்துச் சென்றனர். [ஒ-3]

வடக்கு - கிழக்கு மாகாண

## கூட்டுறவு ஊழியருக்கு தமிழ் நாட்டில் பயிற்சி!

திருகோணமலை, ஜூன் 29

வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த ஊழியர்களுக்கு தமிழ்நாடு சென்னை கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி அளிக்கப்பட இருக்கிறது.

வருடம் ஒரு முறை முப்பது ஊழியர்கள் கொண்ட மூன்று குழுவினர் பயிற்சிக்கு அனுப்பப்படுவர். ஏழு மாதங்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். அவர்கள் அங்கு கற்றுலா ஒன்றையும் மேற்கொள்வர்.

இந்த திட்டத்துக்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் திரு. சி. பற்குணம் தெரிவித்தார். (ஒ-3)

## மினிவான் சேவை

தென்மராட்சி, ஜூன் 29

யாழ்ப்பாணத்திலிருந்து பளை வரைக்குமான மினிவான் சேவை ஒன்றை கடந்த வாரம் முதல் தென்மராட்சி தனியார் பேருந்து சங்கத்தினர் ஆரம்பித்துள்ளனர்.

காலை 7 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து பளைக்கும், காலை 9-45 மணிக்கு பளையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் இச் சேவை நடைபெற்று வருகிறது. [த-117]


### மீண்டும் யாழ்ப்பாணத்தில்

யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தனது விற்பனை நிலையத்தை வாடிக்கையாளரின் நன்மை கருதி 303, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தில் (பரமேஸ்வரா சந்திக்கு அருகில்) திறந்துள்ளதென்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

பொதுமுகாமையாளர்,
யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் - கூட்டுறவுச் சங்கம்,
இருபாலை வீதி, கோண்டாவில்.
[சி-2162]

### பாரதிதாசன்
கல்வி நிறுவனம்
(BECON)
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சை

G. A. Q, 1st in Com.
1992 Sep. / Oct. பரீட்சை
மீட்டல்-மாதிரி வினா-விடை வகுப்பு

பொருளியல்
S. வரதராஜன் B. A. (Hons)

ஆரம்பம்: 01 - 07 - 1992
[புதன் பி. ப. 4-00 மணி]

★ அச்சடித்த மாதிரி வினா - விடைக் குறிப்புகள் வழங்கப்படும்.
★ முன்கூட்டியே பதிவு செய்யும் மாணவர்கள் மட்டுமே வகுப்பிற்கு அனுமதிக்கப்படுவர்.
[4797]

### சென். ஜோன்ஸ் கல்லூரி - யாழ்ப்பாணம்
### பழைய மாணவர் சங்கம்
### வருடாந்த ஒன்றுகூடல்

மேற்படி ஒன்றுகூடல் 14-07-1992ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கல்லூரியில் நடைபெறும். இவ் வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர்களை அழைக்கின்றோம்.

நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| முற்பகல் 7-00 மணிக்கு | — | நற்கருணை ஆராதனை |
| முற்பகல் 8-15 மணிக்கு | — | காலைப் போசனம் |
| முற்பகல் 9-00 மணிக்கு | — | வருடாந்தப் பொதுக் கூட்டம் |
| முற்பகல் 10-00 மணிக்கு | — | 'கிரிக்கெட்' ஆட்டம் |
| பிற்பகல் 1-00 மணிக்கு | — | மதிய போசனம் |
| பிற்பகல் 1-45 மணிக்கு | — | 'கிரிக்கெட்' ஆட்டம் (தொடர்ச்சி) |
| பிற்பகல் 4-00 மணிக்கு | — | அதிபரின் தேநீர் |
| பிற்பகல் 4-45 மணிக்கு | — | உதைபந்தாட்டம் |

பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பும் அங்கத்தவர்கள் அவற்றினை 07-07-1992க்கு முன்னதாக எழுத்து மூலம் செயலாளரிடம் சமர்ப்பிக்கவும்.

போசனங்களில் பங்குபற்ற விரும்பும் அங்கத்தவர்கள் 11-07-1992க்கு முன்னதாக ரூபா 70/-ஐ பொருளாளர் திரு. ந. யே. ஞானப்பொன்ராசா அவர்களிடம் செலுத்துமாறு வேண்டுகின்றேன்.

த. செல்வராஜா,
செயலாளர்.

சென். ஜோன்ஸ் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
[21560]


### முதலாவது பிறந்ததின வாழ்த்து



### செல்வன் கேசவன் குலசன்

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த கேசவன் இராஜேஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் குலசன் இன்று 29-06-1992 (திங்கட்கிழமை) தனது முதலாவது பிறந்த தினத்தை அவரது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, டோஷிகா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், மச்சான், மச்சாள், சித்தப்பா, சித்திமார், பேபி, பிரான்ஸிலுள்ள சித்தப்பாமார், சித்தி, பேபி, மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள், கனடாவிலுள்ள பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமி, அக்காமார், அண்ணா, மச்சான், மச்சாள் மற்றும் உற்றார், உறவினர்கள் ஆண்டவன் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென அன்புடன் வாழ்த்துகின்றார்கள்.

(5101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வைஹலைன் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: ரவி ரேடர்ஸ், பழக்கடை, திருநெல்வேலிச்சந்தி, அல்லது ந. ரவி, இருபாலை றோட், நாகபூஷணி அம்மன் கோவிலடி, கோண்டாவில் கிழக்கு. [21510]

சிவப்பு, வெள்ளை நிற ஆண், பெண் பொமனேரியன் நான்கு மாதக் குட்டிகள் விற்பனைக்குண்டு. J. அல்பிறட் இல. 25, பாக் றோட், குருநகர். [21542]

### கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் சிவப்பு, வெள்ளை, கறுப்பு இன பேட்டுக் குஞ்சுகளும், சேவல் குஞ்சுகளும் விநியோகிக்கப்படும். பதிவு செய்க. பேடு விலை 45 ரூபா, சேவல் விலை 20 ரூபா. சிங்கம் வீதி, உடுவில், மகளிர் கல்லூரிக்கு முன், மல்வம் வீதியூடாக, வலது புற சிங்கம் வீதி. [20599]

### மலிவு விற்பனை

பாடசாலை உபகரணங்கள், அப்பியாசக் கொப்பிகள், C. R. கொப்பிகள் மலிவு விலையில் மாணவர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. றோணியோ குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்) [சி/2726]

### மணப்பெண் தேவை

யாழ். சைவ, 30 வயதுடைய பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பட்டதாரிக்கு 25-28 வயதிற்குட்பட்ட, செவ்வாய்க் குற்றமற்ற, தகுந்த, உயர் பதவி வகிக்கும் மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர். தொடர்பு: வே. வல்லிபுரம், மே/பா, செ. சண்முகலிங்கம், வேணியடி வீதி, மீசாலை தெற்கு, மீசாலை. [21532]

### மணப்பெண்கள் தேவை

கத்தோலிக்க 34 வயது, கனடா மணமக்களுக்கும், 31 வயது கனடா மணமக்களுக்கும், 28 வயது கனடா மணமக்களுக்கும் தேவை. வந்து திருமணம் செய்வர். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம் யாழ்ப்பாணம். [21526]

### மணமக்கள் தேவை

20—30 வயது செவ்வாய்க் குற்றமுள்ள மலையகத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியைகளுக்கு மலையகத்தில் கற்பிக்கும் ஆசிரியர்கள், உத்தியோகத்தில் உள்ள மணமக்கள் தேவை. A B C D E இல. 20, கண்டி வீதி. சுண்டிக்குளி. [21563]

### மணமகள் தேவை

வெளிநாட்டில் தொழில் நுட்பவியலாளராக பணியாற்றும் ஆண், இந்து, நட்சத்திரம்: அத்தம், வயது 32, உதயச் செவ்வாய். தகுந்த மணமகள் தேவை. இல. 419, மே/பா, உதயன். [21544]

### O/L ஆங்கிலம்

92 பரீட்சையில் ஒரே தடவையில் Credit பெறுபேறுடைய அனுபவமுள்ள B. Sc. (Cey.) ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல. 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. [21546]

### கணிதம்

அனுபவமுள்ள B.Sc பட்டதாரி ஆசிரியரினால் ஆண்டு 10,11 வகுப்புகளுக்கு கணிதம் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். தொடர்பு கொள்க. அன்புக் களஞ்சியம், இல. 648, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [21558]

### சோதிடம்

கல்வித்தடை, தொழில் தடை, விவாகத்தடை நீங்கவும், நோய், கஷ்டம், குடும்பப் பிரச்சினை தீரவும் அதிர்ஷ்டம் அழைக்கிறது. சாதகத்துடன் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ஸ்ரீசக்தி கணேச உபாசகர், ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம். இல. 96, கோவில் வீதி, (ஸ்ரீ கைலாச பிள்ளையார் கோவில் சந்தி) நல்லூர் [21531]

### அறிவுக் களஞ்சியம்

இளைஞர்கள், மாணவர்களின் பொது அறிவு, எழுத்தாற்றலை வளர்க்க அறிவுக் களஞ்சியம் - I 1 7-92 வெளிவருகின்றது. இளைஞர்களுக்கான நான்கு போட்டிகளும் உள்ளன. விற்பனையாளர்கள் தேவை. பாடசாலையில் விற்க ஆர்வமுள்ளவர்கள் அதிபரின் அறிமுகக் கடிதத்துடன் தொடர்பு கொள்க. கழிவுண்டு. அறிவுக் களஞ்சியம் [ஆனந்தா புத்தகசாலை], 226, காங்கேசன்துறைச் சாலை யாழ்ப்பாணம். (5107)

## நிவாரண அட்டைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 29

ஊர்காவற்றுறை பல. நோ. கூ. சங்கத்தில் உலர் உணவுப் பொருள்கள் பெறுபவர்கள் தங்களது நிவாரண அட்டைகளை தமக்குரிய கிளைகளில் சமர்ப்பிக்க வேண்டிய இறுதி நாள் இன்று என்று அறிவிக்கப்படுகிறது. [த-111)

---

### பார்வைக் குறைபாடுள்ளோருக்கு

## கல்வி கற்பிக்க குறுகிய காலப் பயிற்சி

**பார்வை இழந்தவர்களின் வாழ்வு கல்வி மூலம் வளமானதாக**

**நீங்களும் உதவ விரும்புகிறீர்களா?**

**இதோ நல்ல தருணம்!**

**பயிற்சி நடைபெறும் இடம்:**
நற்சமூக நடு நிலையம்,
115, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

**காலம்:** 1992 - 08 - 03 (திங்கள்) தொடக்கம், ஒரு மாதம் திங்கள், புதன், வியாழன், வெள்ளி நாட்களில்.
காலை 10 மணி தொடக்கம் — மதியம் 12-30 மணி வரை.

**தகைமைகள்:** க. பொ. த. (உ. த.) 3 பாடங்களில் சித்தி; 30 வயதுக்குட்பட்ட இருபாலாரும்; சமூக நோக்கு; பார்வையற்றோருக்கு கல்வி உதவி செய்வதில் ஆர்வம்.

உபகரணங்கள் யாவும் பயிற்சிக்குக் கொடுக்கப்படும். பயிற்சி முடிவில் தகுதியுடையோருக்குச் சான்றிதழ் வழங்கப்படும்.

15 பேருக்கு மாத்திரம் பயிற்சியளிக்க வசதியுண்டு.

கட்டணம்: இலவசம்

விரும்புவோர் 1992 - 07 - 06 க்கு முன் சுய குறிப்புகளுடன் நடுநிலையத்திற்கு விண்ணப்பிக்கவும்.

பொதுச் செயலாளர்,
நற்சமூக நடுநிலையம்.

[5103]

---

## ஈராண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 22 | 21 |
| — | — |
| 10 | 06 |
| — | — |
| 1960 | 1990 |

### சுப்பிரமணியம் உதயகுமார்

(உரிமையாளர்: கௌரி ஸ்ரோர்ஸ், கல்லடி, மட்டக்களப்பு)

திதி: 29—06—1992

இதய தெய்வமே! உதயகுமாரே!
ஈராண்டு போனதே.........
இருந்தும், உன் நினைவு போகவில்லை.

உன்பிரிவால் துயருறும்;
ஐயா, அம்மா, அண்ணாமார்,
தம்பிமார், உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

''பரிமளவாசா'',
அல்லையம்பதி, துன்னாலை
கரவெட்டி. [21459]

---

### யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் 1992 ஆகஸ்ட் 17ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

**பதவிகள்:**

1. புவியியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11/உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
2. மொழியியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11/உதவி விரிவுரையாயர் (தகுதிகாண்)
3. தமிழில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11/உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
4. கர்நாடக வாய்ப்பாட்டு /வீணை/வயலின் போதனாசிரியர் தரம் 111

**சம்பள அளவுத் திட்டம்:**
சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1: ரூபா 9,600 — 8x250 — 11,600/- [மாதமொன்றுக்கு]
சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11: ரூபா 8,000 — 5x250 — 9,250/- [மாதமொன்றுக்கு]
உதவி விரிவுரையாளர் [தகுதிகாண்] ரூபா 3,900/- மாதமொன்றுக்கு [நிலையானது] ஆண்டு ஒன்றுக்கு.
போதனாசிரியர்: ரூபா 3,000/-[மாதமொன்றுக்கு]

[துறைத் தலைவரினாலும், பீடாதிபதியினாலும் ஓராண்டுச் சேவையைத் திருப்திகரமாக நிறைவு செய்துள்ளாரென அத்தாட்சிப் படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் [தகுதிகாண்] ஒருவரை விரிவுரையாளர் [தகுதிகாண்] என்ற பதவிப் பெயரில் நியமிக்கலாம் என்பதுடன் துணைவேந்தர் அவரை ரூபா 4,500/- — 10x200 — 6,500/-[மாதமொன்றுக்கு] சம்பள அளவுத்திட்டத்தில் வைக்க முடியும்]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும், இதர விவரங்களையும் பெற விரும்புபவர்கள் 23x10 சதுரமீற்றர் அளவுடைய சுய முகவரியிட்டு ரூபா 2/- முத்திரை யொட்டப்பெற்ற தபால் உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத்திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் சிறப்பு தகைமைகளையும்/ அல்லது அனுபவத்தையும் கவனத்தில் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

\- பதிவாளர்,
யாழ்ப்பாணம் - பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-06-25 [சி-2168]

---

## முதலாம் தர அதிபர்களுக்கான நேர்முகப் பரீட்சை

முதலாம் தர அதிபர்களுக்கான நேர்முகப் பரீட்சை அடுத்த மாதம் 10ஆம் திகதி கொழும்பு 'இசுருபாயா'வில் கல்விச்சேவை ஆணைக்குழுவால் நடத்தப்படவிருக்கிறது.

வட-கிழக்கு மாகாணத்தில் இருந்து, 30 இரண்டாம் தர அதிபர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (ஒ-3)

---

### யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் கிளிநொச்சி, விவசாயபீடம்.

## கேள்விப்பத்திரம்

யாழ். பல்கலைக்கழகம் கிளிநொச்சியில் அமைந்துள்ள தனது விவசாய பீடத்தில் (இராமநாதன் விவசாயப் பண்ணை) உற்பத்தி செய்த பாவனைக்குரியதும், விதைப்பதற்குரியதுமான நெல்லை விற்பனை செய்வதற்காகக் கேள்விப்பத்திரங்களைக் கோருகிறது.

1. விதை நெல் — இனம் H 4, BG 350 (சிவப்பு), BG 400-1 (வெள்ளை)
2. பாவனைக்குரிய நெல் — இனம் BG 400 - 1 [வெள்ளை]

கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிப்போர், பின்வரும் விவரங்களைக் குறிப்பிடல் வேண்டும்.

1. தேவைப்படும் இனம்
2. தேவைப்படும் அளவு
3. புசல் ஒன்றிற்குச் செலுத்த விரும்பும் விலை.
4. விதை நெல் / பாவனைக்குரிய நெல்

விற்பனை விலை, விற்பனை செய்யக்கூடிய அளவு ஆகியன கிடைக்கப்பெறும் கேள்விப்பத்திரங்களின் அடிப்படையில், யாழ் பல்கலைக்கழக கேள்விச் சபையினால் தீர்மானிக்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியினையோ ஏற்கும்/நிராகரிக்கும் உரிமை பல்கலைக்கழகத்திற்கு உரியது.

யாழ். பல்கலைக்கழக கேள்விச்சபையின் முடிவே இறுதியானது.

கேள்விப்பத்திரங்கள் 1992 - 07 - 17ஆம் திகதி பிற்பகல் 2-00 மணிக்கு அல்லது முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கீழ்க்கண்ட முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

நிதியாளர்,
யாழ் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

கேள்விப்பத்திர தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் ''நெல் விற்பனைக்கான கேள்விப் பத்திரம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 1992 - 07 - 17ஆம் திகதி பி. ப. 2 - 30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக சபை அறையில் திறக்கப்படும்.

\- பதிவாளர்.

[கி-2163]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சோதனையில் தோல்வி!

அரசு தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தும் பலவகைப் போர்களில் உளவியல் போரும் ஒன்று. உளவியல் போரில் பொய்ப்பிரசாரமும், பிரசாரப் புரளியும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

கடந்த சனிக்கிழமையும் அரசு பிரசாரப்புரளி ஒன்றில் ஈடுபட்டு குடாநாட்டு மக்களுக்கு ஒரு சோதனை நடத்தியது!

சனிக்கிழமை(27ஆம் திகதி) காலை 6 மணி தொடக்கம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படும் என்று ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம், ரூபவாஹினி மூலம் அறிவிக்கப்பட்டது.

ஆனால் சனிக்கிழமை நண்பகலில், யாழ்ப்பாண மாவட்டத்தில் அமுலான ஊரடங்கு அன்று மாலை ஆறு மணி வரை தளர்த்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. காரணம் தெரிவிக்கப்படவில்லை.

பாதுகாப்பான இடங்களுக்கு மக்கள் செல்வதற்காகவே இந்த இடைவெளி— ஊரடங்கு நீக்கம் — அறிவிக்கப்பட்டதாகவும், குடாநாட்டில், குறிப்பாக யாழ். நகர் மீதான பெருந்தாக்குதலுக்கு படையினர் தயாராகிவிட்டதையே இது காட்டுவதாகவும் எமது மக்களில் சிலர் அதற்கு அர்த்தம் செய்தனர் அத்தோடு நிற்கவில்லை. அதனை ஓர் வதந்தியுமாக்கி விட்டனர். இதனால் குடாநாட்டு மக்களில் பலர் குழப்பமடைந்தனர்; பதற்றமுற்றனர்.

வீடு கொளுத்தும் இராசாவுக்கு, நெருப்பு எடுத்துக் கொடுக்கும் மந்திரியாகத் தமிழர்களில் சிலர் இத்தகைய நெருக்கடியான வேளைகளில் மாறிக் கொள்வது கவலைக்குரியதாகும் மக்களை குழப்பத்தில் ஆழ்த்தியும், பதற்றமுறச் செய்தும் அவர்களை மனப்பலவீனப்படுத்தித் தமிழர்களுக்கு எதிரான போரை வெல்ல முயலும் அரசுக்குத் தாம் உதவுகிறார்கள், உடந்தையாக இருக்கிறார்கள் என்பதை அவசர அர்த்தமும், வதந்தியும் பரப்பும் தமிழர்கள் உணர்கிறார்களோ என்னவோ தெரியவில்லை !

குடாநாட்டின் நாலா பக்கங்களும் போர்முனைகளாக மாறி வரும்போது, சொந்த இடத்தில் இருந்து அகன்று இன்னொரு கிராமத்துக்குப் போய் பாதுகாப்பாக இருக்க முடியும் என்பது சாத்தியமானதல்ல.

ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்தால் அது படைக்கு ஒருவித வெற்றியாகிறது. மக்கள் இல்லை; புலிகளே இருந்தார்கள்; குண்டுவீச்சும், எறிகணை வீச்சும் நடத்தி அவர்களை அழித்து விட்டோம் என்று கூறிக் கொண்டு அந்த இடத்தையே பொசுக்கிவிடுவார்கள். அழிவதும், சேதமுறுவதும் மக்களின் வீடுகள் தான்; ஆலயங்கள், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகளே.

இப்படியே படைக்கு 'உதவியும் உடந்தையுமாக இருந்தால் தமிழர் பிரதேசம் முழுவதும் அழிந்து வனாந்தரமாகி விடும். அதன், பின்னர் தமிழ் மக்கள் எங்கே வாழ்வது? கிராமங்களையும், நகரங்களையும் மீள அமைப்பது எப்போது?

சனிக்கிழமை அரசு நடத்திய சோதனையில் அது தோல்வியுறும் வண்ணம் யாழ் நகர மக்களில் 90 சத விதத்தினர் தமது வீடுகளை விட்டு இடம் பெயராமல் இருந்தது பாராட்டுக்குரியது. அன்றாட அலுவல்கள் வழமைபோல நடந்தன. நேற்று நகரில் திருமண வைபவங்கள் கூட நடந்தன. அரசு தனது சோதனையில், முயற்சியில் தோல்வியுற்று விட்டது.

---

# இன்றைய தேவைக்கேற்ற வகையில் கல்வி முறை மாற்றப்பட வேண்டும்

## பாடசாலை நிறுவுனர் நினைவு வைபவத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், ஜூன் 29

அந்நியர் ஆட்சியின் போது இருந்த கல்வி முறை மாறி இன்றைய எமது தேவைக்கேற்ற கல்வி முறை உருவாக்கப்பட வேண்டும். நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் நல்லொழுக்கம், மனவுறுதி, அறிவு நிறைவுக்குமான கல்வி இன்று எமக்குத் தேவை. சமூகப் பார்வைக்கு கல்வி ஒரு உதவுகோல். சுதந்திரமான கல்வி முறையின் மூலமே இவற்றை நாம் உருவாக்க முடியும்;

இவ்வாறு யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவிலும், நிறுவுனர் நினைவு தின வைபவத்திலும் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கிய யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா கூறினார்.

இந்த நிகழ்ச்சிகள் நேற்று முன்தினம் மேற்படி வித்தியாலயத்தில் நடைபெற்றன.

பேராசிரியர் துரைராசா அங்கு மேலும் கூறியதாவது;

மாணவர்கள் பல்வேறு நெருக்கடியின் மத்தியில் கல்வி பயிலும் நெருக்கடியான இக்கால கட்டத்திலும் மனச் சோர்வின்றி கல்வியில் ஆர்வமுடன் விளங்குவது மகிழ்ச்சிக்குரியது. கல்வி அழிந்தால் எமது சுதந்திரம் அழிந்து விடும். இன்று எமது மக்கள் அகதிகளாகி அலைகின்றனர். நோர்வேயில் சுமார் 6 ஆயிரம் தமிழ் மக்கள் அகதிகளாக கண்ணீருடன் வாழ்வதைக் கண்டேன்; தமிழரின் இந்நிலை மாறவேண்டும். அவர்கள் திரும்பி வரும் நிலையை நாம் உருவாக்க வேண்டும். 98 வீதமானவர்கள் பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்புக்கள் இல்லாத நிலையில் அவர்கள் தம்மை தொழிற் கல்வி பெறத் தயாராக்கிக் கொள்ள வேண்டும் என்றார்.

நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துப் பேசிய கல்லூரி முதல்வர் திரு. மு. இராமலிங்கம் தனது உரையில் —

கல்வி சமுதாய மறுமலர்ச்சி தொழிற்துறை போன்ற வாழ்வோடு ஒட்டிய சகல துறைகளிலும் மாணவ சமுதாயம் முன்னேறவும் எமது நாட்டின் புத்துணர்வுக்கும் வழிகாட்டக் கூடியதாக இக் கல்லூரி தனது பணியைச் செய்து வருகின்றது — என்றார்.

### இளம்பரிதி பேச்சு

விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி பேசும் போது —

ஸ்ரீலங்கா அரசு தமிழீழத்தின் கல்வி, பொருளாதார வளர்ச்சிகளைத் திட்டமிட்டு அழித்து வருகின்றது; இந்நிலையில் நாம் எமது வளத்தைக் கட்டியெழுப்பும் வகையில் மற்றவர்களுக்குத் தலை வணங்காத நிலையில் செயற்பட வேண்டும்; நாளை நிர்மாணிக்கப்படும் தமிழீழத்தில் அறிவுஜீவிகளும் தொழில் வளங்களும் பெருகிக் காணக் கூடியதாக எமது கல்வி முறை அமைய வேண்டும் — என்றார்.

நிறுவுநர் நினைவுரை நிகழ்த்திய பேராசிரியர் கலாநிதி சு. மோகனதாஸ் கூறியதாவது:-

யாழ் நகரில் பல்கலைக்கழகம் நிறுவ வேண்டும் என விரும்பிய திரு. கனகரத்தினம் அவர்கள் கிராமப்புற மக்களின் கல்வியிலும், அவர்களின் உயர்விலும் அக்கறை கொண்டு ஸ்ரான்லிக் கல்லூரி என அழைக்கப்படும் இக்கல்லூரியை நிறுவினார். சிந்தனையாளரான அவர் இலவசக் கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்திய அப்போதய கல்வி அமைச்சர் கன்னங்கராவுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு இப்பகுதியின் கல்வி முன்னேற்றத்திற்குப் பெரும் பணியாற்றி உள்ளார் — என்றார்.

திருமதி புஸ்பராணி மோகனதாஸ் மங்கள விளக்கேற்றி நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தார். பல்வேறு துறைகளிலும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களையும், சான்றிதழ்களையும் திருமதி இராஜேஸ்வரி துரைராசா வழங்கினார்.

செல்வன் த. பவன், செல்வி பி. மைதிலி ம. வினித்தா துணை அதிபர் வை. தனேஸ்பரன், பிரதீபன் ஆகியோரும் உரையாற்றினார்கள். மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (ஒ-111-162)

---

### ஓர் இரவில் லட்சாதிபதிகள்

கொழும்பு, ஜூன் 29

தேசிய அபிவிருத்தி வங்கி மக்கள் மயமாக்கப்படுவதைத் தொடர்ந்து அந்த வங்கியின் 10 சதவித பங்குகள் அவ் வங்கியில் பணிபுரியும் 175 ஊழியர்களுக்கு பகிர்ந்து வழங்கப்படவுள்ளன;

இது அந்த ஊழியர்களை 'ஓர் இரவில்' லட்சாதிபதிகளாக்கி விடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மீள்மதிப்பின் படி வங்கியின் மொத்த மூலதனம் 17கோடி 50 லட்சம் ரூபாவாக இருக்கும். அதில் 10 சதவீதமான ஒரு கோடி 75 லட்சம் ரூபா பெறுமதியான பங்குகளே 175 ஊழியர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன என்று தெரிகிறது. (த-எ)

### சிமெந்து ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம் ஜூன் 29

லங்கா சிமெந்து லிமிட்டெட் ஊழியர்களின் ஜூன் மாதச் சம்பளத்தின் 25 வீத கொடுப்பனவு இன்று கன்னாகத்தில் உள்ள தற்காலிக அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

---

### புகையிலைப் பாவனையினால் மட்டும்

# ஒருகோடி 20லட்சம்பேர் புற்றுநோயால் மரணம்!

கொழும்பு, ஜூன், 29

உலகில் வருடாந்தம் ஒரு கோடியே 20 லட்சம் பேர் புகையிலைப் பாவனையால் ஏற்படும் புற்றுநோயால் மரணமடைகிறார்கள்.

பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் இரசாயனவியல் பேராசிரியர் லெஸ்லி குணதிலக்கா இதனைத் தெரிவித்தார்.

2050ஆம் ஆண்டளவில் உலகில் வாராந்தம் ஐம்பது கோடி மக்கள் புகைத்தல் காரணமாக இறப்பார்கள். அவர்களில் சுமார் இருபது கோடி மக்கள் இளம் வயதினராகக் காணப்படுவர் என்றும் அவர் கூறினார்.

வெற்றிலை சாப்பிடுவோர் புகையிலையையும், சுண்ணாம்பையும் தவிர்ப்பதன் மூலம் புற்றுநோயை ஓரளவு அணுகவிடாது தடுக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-3)

---

### ரோமில் 6வருடங்களாக இயங்கி வந்த

# போதை வஸ்து கடத்தும் இலங்கை கோஷ்டி கைது!

ரோம், ஜூன் 29

ரோம் நகரில் கடந்த ஆறு வருடங்களாக இயங்கி வந்த இலங்கை போதை வஸ்துக் கடத்தல் கோஷ்டி ஒன்றை ரோம் பொலிஸார் கைது செய்தனர்.

இக்குழுவில் 3 இலங்கைத் தமிழர்கள், 4 சிங்களப் பெண்கள் மற்றும் ஒரு லிபிய நாட்டவர் ஆகியோர் இருந்தனராம்.

நான்கு நாடுகள் கூட்டாக எடுத்த முயற்சியைத் தொடர்ந்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-த)

---

### உற்சவம்

தென்மராட்சி, ஜூன் 29

சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 17 நாட்கள் நடைபெறும். (த-117)

---

# யாழ். மருத்துவபீடத்துக்காகவும் சமூகத்துக்காகவும் பாடுபட்டவர்

## பேராசிரியரின் நினைவுக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 29

இன்றைய காலகட்டத்தில் உருவாகும் கல்விமான்கள், புத்திஜீவிகள், நிபுணர்கள் தமது பிரதேசத்தை விட்டு சுகபோகம் அனுபவிப்பதற்காக அந்நிய நாடுகளுக்குச் செல்கிறார்கள். ஆனால் பேராசிரியர் சரவணபவானந்தன் தனது மைந்தனை இழந்த நிலையிலும் யாழ்ப்பாண சமுதாயத்துக்காகவும், யாழ். மருத்துவபீடத்துக்காகவும் அயராது உழைத்தவர்.

பேராசிரியர் சரவணபவானந்தனின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடாதிபதி பேராசிரியர் பாலசுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை இக்கூட்டம் நடைபெற்றது.

பேராசிரியர் பாலசுப்பிரமணியம் மேலும் [illegible]வது;

மறைந்த பேராசிரியர் சரவணபவானந்தனின் அகால மரணச் செய்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர்களான எங்களுக்கு மட்டும் அல்ல தமிழ் சமுதாயத்துக்கே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

1987ஆம் ஆண்டு இந்திய இராணுவம் ஆக்கிரமித்த வேளை யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம் ஆறு மாத காலம் இயங்க முடியாது மூ[illegible] வேண்டிய நிலையில் இருந்தது.

இந் நிலையில் பேராசிரியர் சரவணபவானந்தன் தனது முயற்சியால் மருத்துவபீடம் தொடர்ந்து இயங்க வழி வகுத்தார்.

பேராசிரியர் சரவணபவானந்தன், யாழ்ப்பாணத்தில் பெரியதொரு மருத்துவபீடம் கட்ட வேண்டும் என்பதற்காகப் பாடுபட்டு வந்தார்.

அவர் 1980ஆம் ஆண்ட[illegible]த்தில் இரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றிய பின் 1982ஆம் ஆண்டு சட்ட மருத்துவத்துறைப் பேராசிரியர் ஆனார். இலங்கையில் மட்டுமல்ல உலகத்திலேயே சிறந்த மருத்துவ நிபுணராக விளங்கினார்.

இப்படி அவர் கூறினார்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா தனது தலைமை உரையில், பேராசிரியர் சரவணபவானந்தனின் மறைவு யாழ். பல்கலைக்கழகத்துக்கு மாத்திரம் அல்ல முழுத் தமிழ் சமுதாயத்துக்குமே பேரிழப்பாகும் என்றார்.

விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் மகேஸ்வரன், கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை, பேராசிரியர் கணேசலிங்கம் ஆகியோரும் மற்றும் திரு. ரட்ணம் நிர்மலன், திரு. முருகையன், திரு. சந்திரசேகரன். திரு. ரட்ணசபாபதி ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (இ)

---

# உலகச் செய்திகள்

### மார்க்கோஸின் உடலை எடுத்துவர அனுமதி

மாணிலா, ஜூன் 29

மூன்று ஆண்டுகளுக்கு முன் காலமான பிலிப்பைன்ஸின் முன்னாள் ஜனாதிபதி பேர்டினன்ட் மார்க்கோஸின் பூதவுடலை பிலிப்பைன்ஸுக்கு எடுத்துவர அந்நாட்டின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பிடல் ராமோஸ் அனுமதி வழங்கியுள்ளார்;

மார்க்கோஸின் உடல் அவர் காலமான ஹவாய்த் தீவில் தற்போது பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. (த-10)

### அமெ. கடற்படை செயலாளர் ராஜினாமா!

வாஷிங்டன், ஜூன் 29

அமெரிக்க கடற்படைச் செயலாளர் லோறன்ஸ் கறட் தமது பதவியை நேற்று முன்தினம் இராஜினாமாச் செய்தார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற கடற்படையினரின் வருடாந்தக் கூட்டம் ஒன்றில் கடற்படை மற்றும் மாலுமிப் படை உயர் அதிகாரிகள் 14 பெண் கடற்படை உத்தியோகத்தர்கள் உட்பட 26 பெண்களுடன் முறைகேடாக நடந்ததாக வெளியான பத்திரிகைச் செய்திகளை தொடர்ந்தே அவர் ராஜினாமாச் செய்துள்ளார். (த-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜீவ் கொலை வழக்கு

# சட்டத்தரணி மோதிலால் 8பேர் சார்பில் ஆஜராவார்

### நீதிமன்றிடம் விண்ணப்பம்

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கும் பலரில் எட்டுப் பேர்களுக்கு ஆதரவாகத் தாம் சென்னை விசேட நீதிமன்றத்தில் ஆஜராகப் போவதாக பிரபல வழக்கறிஞர் மோதிலால் நேரு கூறியிருக்கிறார்.

இத்தகவலை ''சண்டே ரைம்ஸ்'' வெளியிட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனை தவிர்த்து, வேறு 8 பேருக்காகவே தாம் நீதிமன்றத்தில் ஆஜராக அனுமதி வழங்கும்படி தமிழக நீதிமன்ற பேரவையை தாம் கேட்டுக் கொண்டிருப்பதாக மோதிலால் நேரு தெரிவித்தார்.

தம்மை இவ்வழக்கில் ஆஜராகும்படி கேட்டிருப்பவர்களின் பெயர்களைத் தாம் வெளியிட விரும்பவில்லை என்றும் அவர் கூறியதாக 'சண்டே ரைம்ஸ்' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் மாணவர் கல்வியை அழிக்க நீதி மன்றத் தீர்ப்பே மீறப்படுகிறது

### மாணவர் அமைப்பு அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 29

தமிழ் மாணவர்களின் கல்வியை அழிக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக அரசு நீதிமன்றத் தீர்ப்பையே மீற முனைகிறது.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

''தொடரும் கல்வி அடக்கு முறைகள்'' என்ற தலைப்பிலான அந்த நீண்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய பகுதிகள் வருமாறு:-

உயர்கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்ற புதிய முறை தமிழ் மாணவர்களின் வெட்டுப்புள்ளிகளை எதிர்பார்க்கமுடியாத அளவுக்கு உயர்த்தியுள்ளது. இதனால் தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வது 50 சதவீதத்தினால் குறைவடையும் உயர் பெறுபேறுகளை பெற்ற தமிழ் மாணவர்கள் தாம் தெரிவு செய்யப் படுவோம். என்ற நம்பிக்கையால் 1992 இல நடந்த பரீட்சைக்கு விண்ணப்பிக்கவில்லை. சடுதியான இந்த அறிவிப்பு தமிழ் மாணவர்களைப் பாதிப்படையச் செய்துள்ளது.

1990 ஆம் ஆண்டுப் பரீட்சையின் அடிப்படையிலேயே விசேட பரீட்சை வினாத்தாள் அமைந்ததெனவும் பரீட்சைக்குக் காலஅவகாசம் அதிகமாக இருந்தது என்று சிங்கள அரசு கூறுகின்றது. ஆனால் 1979இல் உயர்தர வகுப்புப் பரீட்சையும், எச். என். சி பரீட்சையும் ஒன்றாகவே கணிக்கப்பட வேண்டும் என்ற நீதிமன்றத் தீர்ப்பையே சிங்கள அரசு இந் நிலையில் மீறுகின்றது.

திறமை அடிப்படையிலான தமிழ் மாணவர் தெரிவை அகற்றி அவர்களின் கல்வி வளத்தை ஒடுக்கிவிட்டால் அடிமைப்படுத்தும் தனது எண்ணம் நிறைவேறிவிடும் என அரசு கனவு காண்கின்றது.

பரீட்சைகளில் ஒரேமாதிரியான வினாக்கள் பலதடவை வந்துள்ளன. பரீட்சை நடத்தாதது அப்பாவித் தமிழ் மாணவர்களின் குற்றமா? அல்லது திட்டமிட்டுச் செயற்படும் அரசாங்கத்தின் குற்றமா?

சிங்கள அரசின் இந்த ஒடுக்கு முறையை எதிர்க்கவும், அதற்காக போரடவும் தமிழீழம் எங்கும் உள்ள எல்லாக் கூறுகளுமே அணிதிரள வேண்டும். சிங்கள அரசின் முகத்திரையை கிழித்தெறிய வேண்டும்-

சர்வதேச உலகின் மனட்சாட்சிக்கு முன் சிங்கள அரசின் கல்வி ஒடுக்கு முறையை முன்வைக்க வேண்டும்; தமிழ் இனத்தின் கல்வி வளம் சிதைக்கப்படுதற்கெதிராக' மாணவர்கள், ஆசிரியர்கள், கல்விமான்கள், பொது மக்கள் அனைவருமே அணிதிரண்டு எதிர்க்க வேண்டும். — என்று தெரிவிக்கப்பட்டது. (அ)

## மரண அறிவித்தல்கள்

### நாகமுத்து - கணபதிப்பிள்ளை

நயினாதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் நாகமுத்து கணபதிப்பிள்ளை 27 6-92 இல் காலமானார்.

இவர் இலட்சுமியின் அன்புக் கணவரும், இராசேஸ்வரன் [ஜேர்மனி], கனகேஸ்வரன் [ஆசிரியர் நயினாதீவு], கலைவாணி [கனடா], கல்யாணி [கனடா], ஜெயராணி [ஆசிரியர் கொழும்பு], காலஞ்சென்ற உமாவேணி ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரசேகரம் [கனடா], ரவிலோசனன் [கனடா], பத்மநாதன் [கனடா], கமலவேணி [ஜேர்மனி], திருஞானவதி [ஆசிரியர்] ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நயினாதீவில் நடைபெற்றன. இத்தகவலை அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

118, பலாலி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
நா. சபாரெத்தினம்
[சகோதரன்]

(21572)

### முருகேசு இராசதுரை
(புத்தூர் கிழக்கு)

முருகேசு இராசதுரை காலமாகிவிட்டார். அன்னார் இராசதுரை மாணிக்கம் அவர்களின் அன்புக் கணவரும், மனோகரன், ஜெபகௌரி, புஸ்பராணி, சுதாகரன், சசிதரன் [நேரு விடுதலைப் புலி] ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் (29 06-92) இன்று காலை 10 மணிக்கு புத்தூர் கிழக்கு மயானத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

கல்கத் வீதி,
புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

தகவல்
சு. அருள்லிங்கம்

(21569)

### திருமதி ஆச்சிமுத்து சோமசுந்தரம்

திருநெல்வேலி புலவர் வளவைச் சேர்ந்த திருமதி ஆச்சிமுத்து சோமசுந்தரம் 28 - 6 - 92 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற வயிரமுத்து சோமசுந்தரம் [மலாயன் பென்சனர்] அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மகாதேவன் [அப்புக்காத்து], குமாரதேவன் ஆகியோரின் தாயாரும், தேவாமிர்தம் மகாதேவனின் அன்பு மாமியாரும், திருமதி (டாக்டர்] சர்வேஸ்வரி இராஜதுலேந்திரன், திரு. இராஜதுலேந்திரன் (கணக்காளர்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 28 - 6 92 பிற்பகல் நடைபெற்றன என்பதை அறியத்தருகிறோம்.

புலவர் வளவு,
திருநெல்வேலி.
[21568]

தகவல்:
ச. தணிகாசலம் J. P.
(பெறாமகன்)

### மாசிலாமணி தேவநேரு
[கிராம சேவையாளர், தாவடி வடக்கு / தெற்கு]

அமரர் மாசிலாமணி இராசம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் இணுவில் மேற்கைச் சேர்ந்தவரும், தாவடி வடக்கு / தெற்கு கிராம சேவையாளருமாகிய தேவநேரு அவர்கள் 28 6 - 92 இல் அமரத்துவமடைந்துவிட்டார்.

அன்னார் வசந்தகுமாரியின் அன்புக் கணவரும், மகிபன், மகதி, தருணி, தரணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவராசா (தொ. நு. உ. கட்டடத் திணைக்களம் கொழும்பு], ஸ்ரீதரன் [டென்மார்க்] ஸ்ரீகாந்தன் (ஜேர்மனி]. ஸ்ரீரஞ்சினிதேவி, சோதீஸ்வரி ஆகியோரின் சகோதரரும், பரமேஸ்வரன் தொ. நு. உ. யாழ்ப்பாணம்), நிர்மலா, பத்மலோஜினி, அம்பாலிகை ஆகியோரின் மைத்துனரும், க. இராசரத்தினம் [ஒய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்], காலஞ்சென்ற இ. பரமேஸ்வரி ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்:
மனைவி, மக்கள்
[21570]

## திருமலையிலுள்ள

# கடற்படைத் தளத்தில் விஜேவீர குடும்பத்தினர்!

கொழும்பு, ஜூன் 29

கொல்லப்பட்ட ஜே.வி.பி. இயக்கத் தலைவர் விஜேவீராவின் மனைவியும், பிள்ளைகளும் திருமலையிலுள்ள கடற்படைத் தளத்தில் கடற்படையினர் பாதுகாப்பில் வைக்கப் பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் உத்தரவின் பேரிலேயே இந்த இடமாற்றம் இடம் பெற்றதாக சிரேஷ்ட கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விமானப் படைத் தளத்தில் உள்ள திஸ்ஸ வித்தியாலயத்தில் விஜேவீராவின் பிள்ளைகள் கல்வி கற்று வருவதாகவும் அவர் மேலும் சொன்னார்.

விஜேவீர குடும்பத்தினர் முன்னர் கணேமுல்ல அதிரடிப் படை முகாமில் வைக்கப்பட்டிருந்தனர் என்பது தெரிந்ததே. [த]

# 2 வருடங்களின் பின் தேசிய தொழிற் பரீட்சைகள்

### ஜூலை 4 இல் ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியில் இரண்டு வருட இடைவெளியின் பின்னர் தேசிய தொழிற்பயிற்சிப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

மின்இணைப்பு, நீர்க்குழாய் பொருத்துதல், தச்சுத் தொழில், மேசன் தொழில் ஆகியவற்றுக்குரிய செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் ஜூலை நான்காம் திகதி தொழில்நுட்பக் கல்லூரியில் ஆரம்பமாகும்.

விண்ணப்பதாரர்களுக்கு உரிய அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டது. அவற்றைப் பெற்றுக்கொள்ளாதவர்கள், தேசிய தொழிற் பயிற்சி அதிகாரசபையைச் சேர்ந்த தொழிற் பரீட்சை அதிகாரி திரு. ம. சிவயோகசுந்தரத்தை தொழில்நுட்பக் கல்லூரியில் ஜூலை மாதம் மூன்றாம் திகதி காலை 9 மணிக்குச் சந்திக்கலாம்.

முன்சொன்ன துறைகளில் ஒரு வருட காலத்திற்கு மேற்பட்ட அனுபவம் உள்ளவர்களும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும் என்றும்—

விவரங்களை ஜூலை மூன்றாம் திகதி தொழில்நுட்பக் கல்லூரியில் அறிந்துகொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி பரீட்சைகள் பிரிட்டிஷ் கவுன்சில் ஆலோசகர்களின் வழிகாட்டலில் சர்வதேச தரத்தில் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. [அ-3]

## இன்று தேர்

தெல்லிப்பழை, ஜூன் 29

இணுவில் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா இன்று காலை நடைபெறவிருக்கிறது. நாளை தீர்த்த உற்சவம் நடைபெறும்.

## அதிகரிப்பு

சுப்பர் டீசலின் விலை லீற்றருக்கு ஒரு ரூபா அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி புதிய விலை லீற்றர் ரூபா 14-50 ஆகும். [ஓ-10]

### கட்டைக் காட்டில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பீரங்கித் தாக்குதல்களும் இடைவிடாது இடம்பெற்று வருகின்றன.

ஹெலிகள், பொம்மர்கள், அவ்ரோ என்பன மாறி மாறித் தாக்குதல் நடத்திய வண்ணம் இருந்தன.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் நான்கு படைப்பிரிவுகள் முன்னேறும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டின் வட கிழக்கு கரையோரத்தை நோக்கியும், தென்மேற்கு [கிளிநொச்சி] பக்கத்தை நோக்கியும் படையினர் முன்னேற முயற்சிப்பர் என்று அந்த வட்டாரங்கள் நேற்று ஞாயிறன்று செய்தி வெளியிட்டன.

[உ-தூ-3-5-10]

# சென். பற்றிக்ஸ் அதிபருக்கு மணிவிழா வாழ்த்து வைபவம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப் அடிகளாரின் அறுபதாவது பிறந்த தினம் நாளை செவ்வாய்க்கிழமையாகும்.

அதனையொட்டி, நாகலிங்கம் நூல் நிலையத்தினர் நாளை மாலை நான்கு மணிக்கு அடிகளாருக்கு மணிவிழா வாழ்த்து வைபவம் ஒன்றை நடத்துகின்றனர்.

நல்லை ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறும் இவ் வைபவத்துக்கு யாழ். பல்கலைக்கழக சமூகவியற்றுறை விரிவுரையாளர் என். சண்முகலிங்கம் தலைமை வகிப்பார்

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், பேராசிரியர் என். பாலகிருஷ்ணன், பேராசிரியர் வி. கணேசலிங்கம், குழந்தை ம. சண்முகலிங்கம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா, திரு. எஸ். ஜோசப்பாலா ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

மணிவிழாச் சின்னத்தை நூலாலய அதிபர் திருமதி நா. நதுலேஸ்வரி வழங்கவுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக மாணவிகளான செல்விகள் மேனின், சித்திராங்கி வழங்கும் ''வழிகாட்டும் தமிழ் பாட்டு'' என்ற இசை நிகழ்ச்சியும் இடம்பெறும். [அ]


## தேனீக்களுக்கான அவசர அழைப்பு

ஆண்டு 11 இனைச் சேர்ந்த ஆண்கள் அனைவரும் இன்று காலை 7.30 மணிக்கு எமது நிறுவனத்திற்கு சமுகமளிக்கவும்.

''தேனீக்கள்''
யூனிவேர்சல் சமூக சேவைப்பிரிவு

கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(சி/2172)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்] லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/ 2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 29 - 06 - 1992 இல் அச்சிட்டு வெளியிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org